**கவனிக்க.**- *2009.04.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1600 - 2009 අප්‍රේල් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2009.04.30**

*1600 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 518 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 520 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 521 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, மே மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகையும் - 2009/2010

(2009.07.01 - 2010.06.30 திகதி வரை)

2009, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2010, யூன் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைந்துள்ள கள்ளுத்தவறணையின் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும்,

2. புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புக் கொள்கைப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள வருமான அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு:-

".... இலக்கமுள்ள ............ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

என குறிப்பிடப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2009.05.18 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக புத்தளம் பிரதேச செயலாளருக்குக் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தள பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க இலங்கை குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2009.05.18 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்கள் புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. சி. எம். நபீல்,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்,
2009.04.06

**அட்டவணை**

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு | சேனைக்குடியிருப்பு | காலை 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>இரவு 8.00 | மு. ப. 10.00 மணி<br>2009.05.18 ஆந் திகதி | 1000.00 |

4-602

## வென்னப்புவை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2009/2010

2009 ஆம் வருடம் யூலை மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2010 ஆம் வருடம் யூலை மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் தயார் செய்யப்படல் வேண்டும்.

2. விண்ணப்பப்பத்திரங்கள் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் தயார் செய்யப்படல் வேண்டியதோடு, அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய வைப்புக் கொள்கைப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும், விண்ணப்பிக்கும் தொகையின் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் இணைக்கப்பட்டும் உறையின் இடதுபக்கத்தில், ''(இல.) .................................. (பெயர்) ..................................................... கள்ளுத் தவறணைக்கான விண்ணப்பப்பத்திரம்'' என கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி தவறணைக்கான இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிட்டு 2009, மே மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் 25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் வென்னப்புவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல. 207, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய இடுதல் வேண்டும்.

5. 2009.05.25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததுடன் விண்ணப்பப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயத்தில் விண்ணப்பக்காரர்கள் அனைவரும் வென்னப்புவை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத் தவறணைகள் திரும்ப விற்பனை 2009.06.08 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும் அன்றைய நாளும் விண்ணப்பங்கள் வர்த்தமானப்பத்திரத்தின்படி அமைதல் வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்கள் வென்னப்புவை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என். டி. நாமரத்ன,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவை.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புத் தொகை ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 01. | வென்னப்புவை பி. செ. பிரிவு | தம்பராவில் | 2009.05.25 காலை 10.00 | 500.00 |
| 02. | வென்னப்புவை பி. செ. பிரிவு | நங்சுண்டான்கரை | 2009.05.25 காலை 10.00 | 250.00 |
| 03. | வென்னப்புவை பி. செ. பிரிவு | வைக்கால் | 2009.05.25 காலை 10.00 | 1,000.00 |
| 04. | வென்னப்புவை பி. செ. பிரிவு | பொரலஸ்ஸ | 2009.05.25 காலை 10.00 | 500.00 |
| 05. | வென்னப்புவை பி. செ. பிரிவு | தும்மளதெனிய | 2009.05.25 காலை 10.00 | 1,000.00 |
| 06. | வென்னப்புவை பி. செ. பிரிவு | லுனுவில | 2009.05.25 காலை 10.00 | 500.00 |
| 07. | வென்னப்புவை பி. செ. பிரிவு | வென்னப்புவ | 2009.05.25 காலை 10.00 | 2,000.00 |
| 08. | வென்னப்புவை பி. செ. பிரிவு | உள்ஹிட்டியாவ | 2009.05.25 காலை 10.00 | 500.00 |
| 09. | வென்னப்புவை பி. செ. பிரிவு | நயினா மடம் | 2009.05.35 காலை 10.00 | 1,000.00 |

| தவறணை திறக்கப்படும் நேரம் | மூடப்படும் நேரம் |
|---|---|
| மு. ப. 11.00 | பி. ப. 02.00 |
| பி. ப. 05.00 | இரவு 08.00 |

4-611

---

## மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் மீண்டும் கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2009 /2010

(கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் 2010 ஜுன் மாதம் வரை)

2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2010 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப் பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளுவிற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான பொது நிபந்தனையாகும் ;

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணைகளை குத்தகை இடும் நிபந்தனைகளுக்கும் அமைவாக

2. எந்தவொரு பிரதேசச் செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக் கூடிய உரிய படிவத்தில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புப்பணமாக மாதம்பை பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாகப் பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு அதன் இடப்பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கமும் பின்வருமாறு "13 ஆம் இலக்கமுள்ள பம்பல கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" என குறிப்பிட்டு 2009. 05. 26 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு மாதம்பை பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பிரதேச செயலாளர் பிரதேச செயலகம், மாதம்பை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

5. 2009.05.26 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகமல் தவறணைகள் ஏதும் இருப்பின் இவற்றுக்கான மீள்விற்பனை 2009.06.09 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் மாதம்பை பிரதேசச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விக்ரம வராகொட
பிரதேச செயலாளர்,
மாதம்பை.

பிரதேச செயலகம்,
மாதம்பை
2009.04.08

**அட்டவணை**

| இல | பகுதி | கிராமம் | தவறணைகள் கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 01. | பிடிகல் கோரலை பம்பல வடக்கு | பம்பல | 2009.05.26 மு. ப. 10.00 மணி | ரூ. 1000.00 |

4 - 639

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

1007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : பிரிபூன் ஒல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 92, தர்மபால மாவத்தை, கொழும்பு 12
கம்பனி இலக்கம் : பீவீ 67466
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009, மாச்சு 31.

புரோபெசனல் எசைன்ட்மென்ட் அன்ட்
செக்ரெட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.
செயலாளர்கள்.

2009, ஏப்பிறல் 7.

4-619

## பி சி எல் கிரியேற்றர்ஸ்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரி வின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

பி சி எல் கிரியேற்றர்ஸ் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2009 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25 ஆந் திகதி ஜி. ஏ. 2242 என்ற இலக்கத் தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது இல. 86G1 டிவேர்டன் பேராதெனிய வில் அமைந்துள்ளது.

(திருமதி) ச. வாசவன்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்.

55F 1/4, 1 ஆம் மாடி மெனிங் பிளேஸ்,
கொழும்பு 06.

4-628

**கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக்கான அறிவித்தல்**

*கம்பனியின் பெயர் :* கிறீன்விச் கொலேஜ் (பிறைவேட்) லிமிடெட்
*கம்பனி இலக்கம் :* பீவீ 67191
*அலுவலகம் :* இல. 34, காலி வீதி, தெஹிவளை

இரா. செந்திற்குமரன்,
செயலாளர்.

2009.03.16.

4-629

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டம்**

241 ஆம் பிரிவின் பிரகாரம் ஒருங்கிணைத்தல்

லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி பீஎல்சீ பிகியூ 70 (LOLC) எல் ஓ ஐபி பினான்ஸல் சேர்விசஸ் லிமிட்டெட் பீபி 134 ("LFSL") ஆகியவற்றின் பணிப்பாளர்கள் எல் ஓ எல் சீ அதன் முழுமையான உரிமையின் துணையாள LFSL உடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 241 ஆம் பிரிவின் பிரகாரம் ஒருங்கிணைவதாக அறிவிக்கின்றனர்.

இந்த ஒருங்கிணைப்பின் நிபந்தனைகளின் பிரகாரம் சகல LFSL இன் பங்குகளும், கொடுப்பனவுகள் மற்றைய பரிசீலனைகளும் இன்றி இரத்துச் செய்யப்படும். LOLC, LFSL இன் சகல ஆதனங்களையம் உடைமைகளையும் சுவீகரித்துக் கொள்ளும்.

ஒருங்கிணைப்பின் பின்னர் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்கள் LOLC யின் தற்போதைய பணிப்பாளர்களாகத் தொடர்ந்தும் இருப்பார்கள்.

பணிப்பாளர்களின் கட்டளைப் பிரகாரம்

செல்வி கிர்ஷாந்தி எமானுவேல்,
கம்பனிச் செயலாளர்.

2009.04.07.

4-630

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின் படி பின்வரும் கம்பனி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங் களுடன் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* யுரோநிப்பொன் மெஷினறி எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2009.04.07
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 67529
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 204/1, காலி வீதி, தல்பிட்டிய வடக்கு, வாத்துவ.

எக்கௌண்டிங் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்.

2009, ஏப்பிறல் 16.

4-631

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

ஹரிஸ் பிறஷ் அன்ட் ஜெனறல் இன்டஸ்றீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹரிஸ் பிறஸ் ஜென்றல் இன்டஸ்றீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆந் திகதி பீவி 67261 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக் கப்பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது இலக்கம், 53/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

ஈ. எம். அன்ட் ஈ. என். ஏஜென்ஸ் அன்ட்
செக்ரட்டறீஸ் பிறைவேட் லிமிட்டெட்
(புதிய கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்)

எம். அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி)
இல. 2 டீல் பிளேஸ்,
கொழும்பு 00300.

4-632

## ஏலவிற்பனைகள்

**மக்கள் வங்கி – மலியதேவ கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29(D) என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனிய ஹத்பத்துவ, உடுகஹ வடக்கு கோரளை, லினியவத்தை என்ற கிராமத்தில் அமைந்துள்ள "திப்பொடுவே ஹேன எஸ்டேட்" என்ற காணிக்கு அளந்து தயாரிக்கப்பட்டுள்ள 1996.09.05 ஆந் திகதியு டைய 1953/1 ஆம் இலக்க வரைபடத்தின் 02 ஆம் இலக்க காணியும் அதனுள் அமைந்துள்ள அனைத்தும் அடங்களாக ஏலவிற்பனை**

(காணியின் விஸ்தீரணம் 00ஏ.00றூ.19.8பே.)

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் 2009.05.22 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு

குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

2003.03.14 ஆந் திகதி இலங்கை அரசின் வர்த்தமானியையும் 2003.08.08 ஆந் திகதி ''டெய்லி நியூஸ்'', 2003.08.08 ஆந் திகதி ''தினமின'' 2003.08.08 ஆந் திகதி தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.-** நாரம்மலையிலிருந்து குளியாபிடிய செல்லும் பாதையில் 1/2 மைல் அளவு சென்றவுடன் ரனஸ்கல்ல மெட்ல் இன்டஸ்ரீஸ் நிறுவனத்துக்கு அண்மையாக இருக்கும் பாதையில் வலது பக்கமாக பெருந்தெருவுக்கு அண்மையில் நாரம்மல நகர எல்லைக்குள் இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** ஏல விற்பனையின் முடிவின் போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்தல் வேண்டும்.

(1) தாம் வாங்கிய விலையின் 10% த்தையும் ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையினதும், பிரதேச சபையினதும் 1% வரியையும் ;

(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனை தொகையின் 2 1/2% கமிசனையும் ;

(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டண மாக ரூபா 500 ஐயும் ;

(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணத்தையும்.

விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90% வீத பங்குப்பணத்தை ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளரிடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. : 037-2222453, பெக்ஸ் : 037-2222338

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும். மேற்குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத்தவறின் ஏற்கெனவே செலுத்திய பணத்தின் 10% தையும் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும் மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

நீதிமன்ற ஆணையாளர், உத்தரவு
பெற்ற ஏலதாரர், மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள் கட்டிடத்தொகுதி,
குமாரதுங்க மாவத்தை, குருநாகல்.
தொலைபேசி இல. : 037-2220062

4-625

## யூனியன் பேங்க் ஒப் கொழும்பு லிமிடெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளின் மூலம் அளிக்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விசேட) ஏற்பாடுகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏல விற்பனை**

***233 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தைப் பற்றிய விவரணம்***

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின், கொழும்பு மாநகர சபையின் வெள்ளவத்தை வடக்குப் பிரிவின் ரோஹினி வீதியில் அமைந்துள்ள ரோஹினி வீதியின் வரிமதிப்பீட்டு இல. 34 என்னும் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் கே. கே. திருநாவுக்கரசு என்பவரால் அளந்து தயார் செய்யப்பட்ட 1976, யூலை மாதம் 12 ஆந் திகதிய 1998 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தொதுக்கப்பட்ட லொட் 12A (வெள்ளவத்தை பதிவு செய்யப்பட்ட வரைபடத்தின் லொட் 6 இன் லொட் B யின் ஒன்றிணைத்தலொன்றின் உப பிரிவிடல் ஒன்றாகிய 6B5BC12 இன் உப பிரிவிடல் ஒன்றாகிய) பதின்மூன்று தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.60பே) விசாலமான இடப்பரப்பும் இதற்கான வீதி உரிமை மற்றும் அதன் மீதான ஏனைய உரிமைகளுடன்.**

*(இவ்வாதனம் கொழும்பு 06, ஐ. பீ. சீ. வீதியில் 30(1) ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள (இதனகத்துப் பின்னர் ''ஈடுபெறுபவர்'' என அழைக்கப்படுகின்ற) ஹெரொனயிட் புரொபர்ட்டி டிவெலெப்பர்ஸ் தனியார் கம்பனியால் கடன், முற்பணம் மற்றும் மேலதிகப் பற்றுக்கமைய காலத்துக்குக் காலம் தனது நடைமுறைக் கணக்கிலிருந்து பெறப்பட்ட வங்கி வசதிகளின் காரணமாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எம். ரேணுகா பீ. குணசேகர என்பவரால்எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 233 ஆம் இலக்க 2006.03.30 ஆந் திகதி ஈட்டுமுறி நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் அதனை ஈடுபெறுபவரால் யூனியன் வங்கியில் ஈடுவைக்கப்பட்டுள்ளது.)*

யூனியன் பேங்க் ஒப் கொழும்பு லிமிட்டெட்டினால் எம்மிடம் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் 2009, மே மாதம 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமையன்று மு. ப. 11.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு அவ்வாதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலம் முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 25% (நூற்று இருபத்தைந்து) ;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) விளம்பர செலவினம் ரூபா 1,50,000;
(5) இலிகிதர் மற்றும் கூறுவோர் கட்டணம் ரூ. 500;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 5,000;
(7) விற்பனை விலையின் மீதான சேர் பெறுமதி வரி 12%.

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள்

அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யூனியன் வங்கியின் சட்டத் திணைக்களத்தை தொலைபேசியில் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 011-2570703, 2370694.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற
இலங்கையின் ஐஎஸ்ஓ 9001 : 2000
அத்தாட்சிப் பெற்ற முன்னோடி
பட்டயம் பெற்ற ஏலதாரரும் பெறுமான
மதிப்பீட்டாளரும் மதியுரைநரும், வியாபாரிகளும்,

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி. | இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05. |
| தொலைபேசி : 081-2227598 | தொலைபேசி : 011-2502680, 2585408 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகல் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

4- 633

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி – அவிசாவளை கிளை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஏவகம கோரலயில் உடுகொட பத்து கலுகல்ல கிராமத்தில் அமைந்துள்ள நாகாவத்த என்ற காணியின் நிலஅளவையாளர் எஸ். இந்தமல்கொடவில் 15.01.1981 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1371 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து ஏல விற்பனை

(காணியின் விஸ்தீரணம் (3ஏ.1றூ.16பே.)

(கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த காரியவசம் புவக்விட்டியகே குமாரசிரி மற்றும் வெல்பல்ல ஆராச்சிலாகே பத்மினி ரணசிங்க என்பவர்கள் மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சிக்கு ஈடுவைத்துள்ளனர்.)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. (பதிவு இல. பீகியூ 116) அதிகாரிகளினால் எனக்கு பணிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் இக்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை 2009 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 2008.09.19 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும் “லக்பிம”, “தஜலண்ட்” மற்றும் “வீரகேசரி” ஆகிய பத்திரிகைகளையும் மற்றும் ஏல விற்பனை விளம்பரத் துக்காக 2009.04.30 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2009.05.05 ஆந் திகதியுடைய “திவயின” மற்றும் “த ஜலண்ட்” பத்திரிகை களையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் விதம்.**- கொழும்பு- அவிசாவளை பிரதான வீதியில் 44 கிலோ மீட்டர் இடத்தில் இடது பக்கம் கொஸ்கம இளைஞர் நிலையத்தின் அருகில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் இறுதியில் பின்வரும் தொகைகளை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%;

(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;

(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;

(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;

(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

(7) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பிரதான கிளையில் அல்லது தளவத்துகொட கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கு : முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, 78, கொழும்பு ரோட், அவிசாவளை, தொலைபேசி இல. : 036-2231301, 036-2231303, 036-223104, பெக்ஸ் இல. : 036-2231303.

எல். பி. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற மூத்த ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர், நீதிமன்ற ஆணையாளர்
வர்த்தக மேல் நீதிமன்றம், மற்றும் கொழும்பு
மாவட்ட நீதிமன்றம், உத்தரவுபெற்ற ஏலதாரர்,
அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகள்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி /பெக்ஸ் : 2445393

4-641

---

## மக்கள் வங்கி - கிரிஉல்ல கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி விதிமுறையின் கீழ் விற்பனை அறிவித்தல்

**1 ஆம் காணி**

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பல ஹத்பத்துவ, மெந்தபத்து கோரளை, (கிழக்கு) கெலேகெதர என்ற கிராமத்தில் அமைந்துள்ள ''கஹட்டகஹமுல ஹேன'' என்ற**

**காணிக்கு 1988.11.20 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 195 ஆம் இலக்க வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணி**

**விஸ்தீரணம் : 1ஏ. 0றூ. 16பே. விஸ்தீரணமுள்ள**

**காணியும் அதனுள் அமைந்துள்ள அனைத்தும் அடங்கலாக.**

*2 ஆம் காணி*

**குறிப்பிட்ட கெலேகெதர என்ற கிராமத்தில் அமைந்துள்ள "கஹட்டகஹமுல ஹேன" என்ற காணிக்கு 1988.11.20 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 195 ஆம் இலக்க வரைபடத்தின் 03 ஆம் இலக்க காணி**

**(பரப்பளவு : 1ஏ. 0றூ. 16பே. விஸ்தீரணமுள்ள**

**காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம், உட்பட அனைத்தும் அடங்கலாக.**

*3 ஆம் காணி*

**குறிப்பிட்ட கெலேகெதர என்ற கிராமத்தில் அமைந்துள்ள "அறகஹபிட்டடிலஹேன" என்ற காணிக்கு நிலஅளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 01 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தின் க. கி. ப. 399 ஆம் இலக்க வரைபடத்தின் 17 ஆம், 19 ஆம் இலக்க காணிகள்.**

**பரப்பளவு : 4ஏ. 0றூ. 4பே. விஸ்தீரணமுள்ள**

**காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம், உட்பட அனைத்தும் அடங்கலாக.**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் என்னால் 2009.05.29 ஆந் திகதி மு. ப. 11.00 மற்றும் நண்பகல் 12.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007.12.078 ஆந் திகதி வர்த்தமானி 2008.03.05 ஆந் திகதி "தினமின" 2008.02.05 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்" 2008.03.05 ஆந் திகதி "தினகரன்" என்பவற்றில் வெளியிடப்பட்டுள்ள ஏலவிற்பனை அறிவித்தலுக்கு உங்கள் கவனத்தை செலுத்தவும்.

**ஆனத்துக்குச் செல்லும் பாதை.-**

1 ஆம் காணிக்கு.- குருநாகல் நீர்கொழும்பு பிரதான பாதையில் 18 மைல் அளவு சென்றவுடன் அகப்படும் தம்பதெனிய நகரில் வலது பக்கமாக இருக்கும் கட்டுகம்பல பாதையில் 1 1/2 மைல் அளவு சென்றவுடன் வலது பக்கமாக அகப்படும் கெலேகெதர பாதையில் 1/2 மைல் அளவு சென்றவுடன் இடது பக்கமாக அகப்படும் கிரவல் பாதையில் 15 யார் சென்றவுடன் இந்த ஆதனம் அமைந்துள்ளது.

2 ஆம் காணிக்கு.- மேலே குறிப்பிட்ட கெலேகெதர பாதையில் மேற்குறிப்பிட்ட ஆதனத்தைத் தாண்டி 1/4 மைல் சென்றவுடன் வலதுபக்கமாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை.-** ஏலவற்பனையின் இறுதியில் ஆதனத்தை வாங்கியவர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணத்தை செலுத்துதல் வேண்டும்.

(1) வாங்கிய விலையின் 10%;
(2) மாகாண அதிகார சபையின் வரியாக 1%;
(3) ஏலவிற்பனைக் கமிஷனாக விற்பனை விலையின் 2 1/2 %;
(4) எழுதுவினைஞர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500;
(5) விற்பனை செலவுகள், வேறு கட்டணம் இருப்பின் அந்தப் பணம்;
(6) விற்பனைச் சான்றிதலுக்கான முத்திரைக் கட்டணம்.

வாங்கிய விலையின் மிகுதி 90% மான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கியின் "குருநாகல் பிரதேச அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 037-2222453, தொலைநகல் இல. : 037-2222338.

உரிமைப் பத்திரம் வேறு விபரங்களைக் மேற்கண்ட முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய கொள்வனவு விலையின் 10% பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
அதிகாரம் ஏலவிற்பனையாளர்,
மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள்,
வர்த்தக கட்டிடத்தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 037-2220062.

4-623

---

**மக்கள் வங்கி - மாத்தறை தர்மபால மாவத்தை கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தமான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள் ஏலவிற்பனை**

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.05.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ் குறிப்பிடுகின்ற சொத்துக்கள் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே கந்தபட பத்துவையின் நரவெல்பிடயில்அமைந்தள்ள துஸெவ்மினிஹாகேவத்த என்ற காணி 2005.07.16 ஆந் திகதிக்குரிய திரு. எம். எல். எம். ரஷ்மி அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் அவர்களினால் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட இலக்கம் 2258 எனும் வரைபடத்திற்கிணங்க பிரித்து வேறாக்கப்பட்ட 'ஏ' எழுத்தைக் கொண்ட ஒரு றூட், எட்டு பேரச்சஸ்கள் (0ஏ. 1றூ. 8பே.) கொண்ட மிகப் பெரிய காணியும், அதிலுள்ள அனைத்து பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் போன்றன அடங்கலாக.

**மேலதிக விபரங்களுக்கு.**-2008.02.29 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தாமனிப் பத்திரிகையிலும் 2008.03.14 ஆந் திகதியின் "தினமின" சஞ்சிகைகளைளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியை கவனததிற் கொள்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**-எல்லேவெல வழியே சுமார் 2 1/2 கி. மீற்றர் அளவு தூரம் செல்ல நரவெல்பிட சந்தியிலிருந்து சந்திக்க முன்பே பாதையின் வலப்பக்கமாக இச்சொத்துக்கள் (ஆதனம்) அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**-வெற்றி பெற்ற கொள்வன வாளரினால் இறுதியில் ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ்கண்ட படி பணமாக செலுத்தல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1%;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணம் இருப்பின் அவற்றுக்கான பணம் ;
(6) விற்பனை உறுதிப்படுத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 (முப்பது நாட்கள்) "மாத்தறை, பிட்டனிய வீதியில் இலக்கம் 38/1" எனும் நிலையத்திலுள்ள மக்கள் வங்கிப் பிரதேச பிரதான அலுவலகத்தில், பிரதேச முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்துக. தொலைபேசி இல. : 041-2222792, 2222822, 224773, பெக்ஸ் இல. : 041-2222688.

உரிமை கோறும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறறுக் கொள்க.

மேற்படி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறி னால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது விடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731.

4-620

---

## மக்கள் வங்கி - தெனியாய கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தமான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள் ஏலவிற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.05.21 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு இங்கு கீழ் கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள் சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே மொரவக் கோரளையில் கொடபொலயில் அமைந்துள்ள நவதனி அல்லது நயின்தாவ என்னும் காணி பகிர்ந்து வேறாக்கப்பட்ட திரு. ஜே. டபிள்யூ. நீஸ் நிலஅளவையாளர் இல. 78, 1932.12.19, 20, 21 ஆந் திகதிக்குரிய வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் இல. 9, 10, 11, 12, 13, 14, 15, 16 கொண்ட நிலப்பகுதியைக் கொண்ட நாற்பத்து ஒரு ஏக்கர் முப்பத்திரண்டு பேர்ச்சஸ்கள் (41ஏ. 0றூ. 32பே.) என்று குறிப்பிட்டு சரியாக நாற்பது ஏக்கர் மூன்று றூட் முப்பத்திரண்டு பேர்ச்சஸ்கள் (40ஏ. 3றூ. 32பே.) கொண்ட மிகப்பெரிய காணியில் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள், உட்பட அனைத்துமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**-2008.09.19 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தாமனிப் பத்திரிகையிலும 2009.11.19 ஆந் திகதியின் "தினமின" சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**-தெனியாய நகரத்தில் இருந்து சுமார் 1 1/2 மைல் அளவு கொடபொல நகரத்திற்கு வரும் போது தெனியாய தோட்டத்திற்குத் திரும்பும் பாதை தென்படும் அப்பாதை படாந்துரைக்கு செல்லும் பாதை வழியே சுமார் மைல் 1 1/2 அளவு செல்லும் போது அப்பாதைக்கு இடப்பக்கமாக தியபாதையூடாக செல்லும் குறும்பாதை தென்படும் அந்த குறுக்கு வீதி இந்த தோட்டத்திற்கு செல்லும் பாதையாகும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**-வெற்றி பெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ்கண்ட படி பணமாக செலுத்தல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக மாகாண அதிகாரிக்கு விற்பனை விலையில் 1%;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணம் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புறன, அநகாரிக தரமபால மாவத்தையின் இல. 38/4A" என்ற நிலையத்தில் அமைந்துள்ள "மக்கள் வங்கியின் பிரதான அலுவலகத்தில் முகாமையாளர்" அவர்களுக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல.: 041-2222792, 2222822, 224773, பெக்ஸ் இல. : 041-2222688.

உரிமை கோறும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731, 071-4438516.

4-621

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள் நிலமனை ஏலவிற்பனை

*கொழும்பு 5, நாராஹேன்பிட்டி, கிருள ரோட், இல. 92, ஐச் சேர்ந்த குற்றின் இன்ரர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்டின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த வலபனே பிரதேச சபை எல்லைகளுக்குள் பன்னலையில் அமைந்த நிகவெல, கஹட்டலங்கஹேன நிகவெல, தென்னஹேன மற்றும் நிகவெலஹேன என அழைக்கப்படும் ஆதனம்.*

*இலங்கை வங்கி, கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளரக்ள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2008.09.12 ஆந் திகதி 1567 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2008.09.05 ஆந் திகதி "டெய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, மஹாநாம ட்ரைவ், பிற்றகோட்டை, கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த ஆர். எஸ். எம். ஏலத்தின் ஏலதாரர் 209.05.30 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

### முதலாவது அட்டவணை

*மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தில் ஓயபலாத்த கோரளை வலபனேயில் வலபனே பிரதேச சபை எல்லைகளுள் பன்னலயில் அமைந்த நிகவெல, கஹட்டலங்கஹேன நிகவெல, தென்னஹேனயும், நிகவெலஹேனயும் என அழைக்கப்படும் தொடர்ச்சியான காணிகளிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எஸ். எம். அஸ்வட் தயாரித்த 1993, ஓகத்து 10 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1950 இல் விபரித்த துண்டுகள் 1, 2, 3, 4, 5 மற்றும் 6 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட காணித்துண்டுகள் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1950 இல் விபரித்த அடுத்தடுத்து அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட காணித்துண்டுகள் 1, 2, 3, 4, 5 மற்றும் 6 ஒரே ஆதனமாக்கப்பட்டுள்ளதுடன் வடக்கில் : ஆர். எம். குணதிலக்கவுக்குச் சொந்தமான நிகவெலகும்புரயும் டி. எம். பிரேமதிலக்கவுக்குச் சொந்தமான நிகவெலகும்புரயும் ; வடகிழக்கில் : டி. எம். பிரேமதிலக்கவுக்குச் சொந்தமான நிகவெலகும்புரயைப் பிரிக்கும் எலயும் பீ. பி. எம். ஹேரத் என்பவருக்குச் சொந்தமான நிந்தபிட்டிய என அழைக்கப்படும் நெல் வயலும் ; கிழக்கில் : எஸ். எச். ஹேரத்துக்குச் சொந்தமான ஆதனமும் டபிள்யூ. எம். விஜேசிங்ஹவுக்கு சொந்தமான ஆதனமும் ; தெற்கில் : கால்வாயும் கண்டியிலிருந்து மகியங்கனை வரையான பெருந்தெருவும் ; மேற்கில் : கே. டபிள்யூ. எம். ஹீன்மெனிக்காவுக்குச் சொந்தமான நிகவெலஹேனயும் டி. எம். பிரேமதிலக்கவுக்குச் சொந்தமான நிகவெலகும்புரயைப் பிரிக்கும் எலயும் ; வடமேற்கில் : டி. எம். பிரேமதிலக்கவின் நிகவெலகும்புரயைப் பிரிக்கும் எலயும் எல்லைகளாகக் கொண்டு முழுமொத்தமாக ஐந்து ஏக்கர் ஒரு றூட் பதினைந்து பேர்ச்சஸ்கள் (5ஏ. 1றூ. 15பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சலகதும் ஆகும். இக்காணி நுவரெலியா காணிப்பதிவகத்தில் O 155/127 இல் பதிவு செய்யப்பட்டது.*

### இரண்டாவது அட்டவணை

*கையிருப்புக்கள் உட்பட கடமைப்பட்டவரின் அசையும் சொத்துகளும் இயந்திர சாதனங்களும் பின்வருமாறு :-*

| *Index No.* | *Name of the Machine* | *Brand Name* | *Model Numbers* | *Made in* | *Quantity* |
|---|---|---|---|---|---|
| 1. | Single Needle Lock Stitch | Juki | DDL-8500 | Japan | 122 |
| 2. | Single Needle Lock Stitch | Juki | DDL-880 | Japan | 48 |
| 3. | Single Needle Lock Stitch | Typical | GC-6150H | - | 32 |
| 4. | Single Needle Lock Stitch Under Bed Trimmer | Juki | DDL-8700-7 | Japan | 8 |
| 5. | Single Needle Lock Stitch Under Bed Trimmer | Kaixuan | KX-8500-5-6D | Japan | 4 |
| 6. | Single Needle Under Bed Trimmer | Typical | GC6180ME3 | Japan | 30 |
| 7. | Single Needle Edge Cutter | Juki | DLM-5200 | Japan | 3 |
| 8. | Single Needle Edge Cutter | Toyota | LS2-B347 | Japan | 3 |
| 9. | Double Needle | Juki | LH-3128 | Japan | 20 |
| 10. | -do- | Brother | LT2-B842-3 | German | 7 |
| 11. | Overlock | Juki | MO3616/M | Japan | 16 |

| *Index No.* | *Name of the Machine* | *Brand Name* | *Model Numbers* | *Made in* | *Quantity* |
|---|---|---|---|---|---|
| | (5Thread) | | 02366N | | |
| 12. | Overlock (5thread) | Typical | GN-2000-5 | Japan | 7 |
| 13. | Overlock (3 thread) | Juki | 2354N | Japan | 1 |
| 14. | Overlock (6 thread) | Kaxuan | KX767 | Taiwan | 2 |
| 15 | Overlock (6thread) | Pegasus | M600 | Taiwan | 13 |
| 16 | Button Hole | Brother | L11-4-D814 | German | 5 |
| 17 | Key Button Hole/ Eye Button Hole | Durkopp Addler AG | 0558 242391 | German | 1 |
| 18 | Key Button Hole/ Eye Button Hole | Reece | 101 | USA | 3 |
| 19 | Multi Needle Chain Stitch | Kansai - Special | DFB1412P | Japan | 4 |
| 20 | Kansai Loop Machine | Kansai Special | B-200C | Japan | 1 |
| 21 | Flatlock Machine | Pegasus | W 664-03SB | German | 1 |
| 22 | Blind Stitch/ Blind Hem | US Stitch Line | SL718-2 | | 4 |
| 23 | Feed of the Arm | Juki | MS-1190M | Japan | 4 |
| 24 | Feed of the Arm | Juki | MS -191 | Japan | 2 |
| 25 | Velcor Attached Electronic | Juki | LK-1930 | Japan | 1 |
| 26 | Button Attach Electronic | Juki | LK-1903 | Japan | 3 |
| 27 | Button Attach (Lock Stitch) | Juki | LK-1851 | Japan | 2 |
| 28 | Button Attach (Chain Stitch) | Juki | MB -373 | Japan | 4 |
| 29 | Snap Button Attach Machine | Juki | | Japan | 3 |
| 30 | Bartac Machine Electronic | Juki | LK-1900 | Japan | 3 |
| 31 | Bartac Normal | Juki | LK-1850 | Japan | 5 |
| 32 | Welt Pocket Attach Machine | Durkopp Addler | 0935-00024600 | German | 1 |
| 33 | Zigzag Machine | Kaixuan | 20U53 | | 3 |
| 34 | Cutting Machine 08'' (Blue Streak II) | Eastman | 629X | USA | 1 |
| 35 | Cutting Machine 10" (Blue Streak II) | Eastman | 629X | USA | 2 |
| 36 | Cutting Machine 10" | Eastman | 829 | Taiwan | 1 |
| 37 | Cloth Drill maker 08'' | Eastman | CD-3 | USA | 1 |
| 38 | Band Knife (3700 m.m.) | C. K. S. | | Japan | 1 |
| 39 | End Cutter Machine | Sulee | 2611N | Japan | 2 |
| 40. | Pattern Cutter (Template Making) | Racing | K-1 II | | 1 |
| 41. | Needle Search FM | Cintex | | England | 1 |
| 42. | Complete Topper (Big Jim) | Comptel Topper | 330 | Italy | 2 |
| 43 | Pony Stain remover | Pony | 20065 | Italy | 1 |
| 44. | Fusing Machine | Korea Fiblon | HBPH-100D | Korean | 1 |
| 45. | Fusing Machine | - | NHG-900 | China | 1 |
| 46. | Fabric Inspection Machine | | | China | 1 |
| 47. | Light Box (the judge II) | Gretagmac Beth | | Hongkong | 1 |
| 48. | Thread Sucker | Toyota | | Japan | 1 |
| 49. | Susmen Electric Boiler (24KW) | Susmen | ES24 | | 1 |
| 50. | Susmen Electric Boiler (68Kw) | Susmen | ES72 | | 1 |
| 51. | Striping Machine | - | - | | 1 |

| *Index No.* | *Name of the Machine* | *Brand Name* | *Model Numbers* | *Made in* | *Quantity* |
|---|---|---|---|---|---|
| 52. | Collar Turn Machine | - | - | | 2 |
| 53. | Air Compressor (4.0kw) | - | - | | 1 |
| 54. | Air Compressor (1.5 Kw) | Europa 440 | - | - | 1 |
| 55. | Generator (200kw) | Catepillar | S. No. 852120 03 Model No. 3306 DI | U. S. A. | 1 |
| 56. | Generator (2KW) | Sri Ram | SA-4 S No. 8JFOO7 52 | | 1 |
| 57. | Pre Fabricated Steel Racks | | | South Africa | 1 |

*மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், பன்னலயில் அமைந்த 'கீர்த்திபண்டாரபுர' என அழைக்கப்படும் காணியில் குற்றின் இன்ரர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் என்னும் நிலமனையில் காணப்படும் (இதன் பின்பு "கடமைப்பட்டவரின் இயந்திர சாதனம் உபகரணம்" என கூட்டாக குறிப்பிடப்பட்டுள்ள சகலதும்) விபரித்த ஒவ்வொரு அசையும் ஆதனத்தினதும் தனிப்பட்ட மற்றும் சகல தளபாட உபகரண பொருத்துக்கள் மற்றும் பண்டங்களும் இதன் பின்பு அவ்வப்போது தொடர்ந்து மேற்குறிப்பிட்ட நிலமனையில் வைத்துள்ள அல்லது நிலைமனைக்கு கொண்டு வரப்படும் விபரித்த மற்றும் ஏனைய அசையும் ஆதனம் ஒவ்வொன்றும் மற்றும் இதன் பின்பு கடமைப்பட்டவர் அவ்வப்போது அகற்றும் மேற்குறிப்பிட்ட இயந்திர சாதன உபகரணங்களும் கடமைப்பட்டவரின் அசையும் ஆதனமும் கடமைப்பட்டவரின் வியாபாரம் அல்லது வணிகம் அல்லதுஇயந்திர சாதன சொத்துக் களஞ்சியம் மற்றும் அசையும் சொத்தும் ஆகும்.*

*பிரசித்த நொத்தாரிசுகளாகிய பத்மினி ரேணுகா தி சில்வா மற்றும் மனோஹரி குணசேகர அல்லது வலிசிங்ஹ முறையே அத்தாட்சிப்படுத்திய 1996.11.20 மற்றும் 1998.06.18 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 1023 மற்றும் 264. பிரசித்த நொத்தாரிசு தம்மிக கித்துல்கொட அத்தாட்சிப்படுத்திய 2006.10.226 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 1635 மற்றும் 1636.*

*பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,*

*எஸ். டி. சில்வா,*
*தொடர்பாடல் முகாமையாளர்,*
*அறவிடல் - தொகுதி.*

*இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,*
*இலங்கை வங்கி,*
*கொழும்பு 1.*

*4-647*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*